செ.வெ.எண்.76 நாள்.25.10.2017.

கடந்த 23.10.17 அன்று காலையில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் “மக்கள் குறை தீர்க்கும் நாள்”முகாம் நடைபெறும் கட்டிடத்திற்கு அருகில் திறந்த வெளியில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு கடையநல்லூர் கிராமத்தைச் சார்ந்த ஒரு குடும்பத்தில் உள்ள கீழ்க்கண்ட 2 பெரியவர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள் ஆகியோர்கள் “மண்ணெண்ணை”யை தங்களுக்குள் ஊற்றிக் கொண்டு தீ வைத்துக்கொண்டார்கள்.. அவர்கள் பெயர்கள் பின்வருமாறு

1.திரு. இசக்கிமுத்து த-பெ பலவேசம் (28)

2.திருமதி. சுப்புலட்சுமி க-பெ இசக்கிமுத்து (25)

3.சிறுமி. மதீஸ் ஆர்வின்யா (5) த-பெ இசக்கிமுத்து

4.சிறுமி. அக்சயா பரணிகா (1.1/2)

மேற்கண்ட நான்கு நபர்களும் உடன் திருநெல்வேலி அரசுமருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த நெஞ்சை உலுக்கும் சம்பவத்திற்கு “கந்து வட்டி”காரணம் என்றும் சொல்லப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் காரணமாக திருநெல்வேலி நகர காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இம் மாவட்டத்தில் ஒவ்வொரு வாரமும் பொதுமக்களின் குறைகள் தொடர்பான மனுக்களை பெறுவதற்கு அரசு ஆணைப்படி திங்கட்கிழமை தோறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. காலை 11.00மணியளவில் முதல் கட்டமாக “மாற்றுதிறனாளிகளிடமிருந்து மனுக்களை மாவட்ட ஆட்சியர் அவர்களால் பெறப்பட்டு பின்னர் 11.30மணி முதல் 2.00மணிவரை பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வாரத்திலும் பல்வேறு துறைகளுக்கு மொத்த மனுக்கள் சராசரியாக சுமார் 700 மனுக்கள் பெறப்பட்டு வருகிறது. இந்த திங்கட்கிழமை குறை தீர்க்கும் நாள் கூட்டத்திற்கு மனுக்கள் பல்வேறு துறைகளை

சார்ந்தவையாக வரப்பெறுவதால் மாவட்டத்தில் உள்ள அனைத்து துறையைச் சார்ந்த அலுவலர்கள் சுமார் 75 அலுவலகங்களிலிருந்து வருகை தருவார்கள். அரங்கில் அனைவரும் ஒரே நேரத்தில் வருகை தந்துள்ள நிலையில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை மாவட்ட ஆட்சியர் மாவட்ட வருவாய் அலுவலர் பெற்றுக்கொண்டு மனுக்களில் எந்த துறைசார்ந்த அலுவலர்க்கு அனுப்பப்படவேண்டும் என்று குறிப்பு எழுதி மனுதாரரை மனுவில் குறிப்பிடும் கோரிக்கை தொடர்பாக விசாரணை மேற்கொண்டு பின்னர் அந்த மனுவிற்கு தொடர்புடைய அலுவலகத்திலிருந்து வருகை தந்துள்ள அலுவலரை அழைத்து தக்க அறிவுரைகள் வழங்கி மனுதாரருடன் கலந்து பேசி கோரிக்கை தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்து முடிவு செய்து அறிக்கை செய்திட கேட்டுக்கொள்ளப்பட்டு மனுக்கள் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலரிடம் நேரில் ஒப்படைக்கப்படும். பின்னர் அவ்வாறு ஒப்படைக்கப்படும் மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறையினர் நடவடிக்கைகள் எடுத்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை மனுதாரர்க்கும் இவ்வலுவலகத்திற்கும் அறிக்கை செய்வார்கள். அவ்வாறு அரசு நிர்ணயிக்கும் காலக் கெடுவிற்குள் மனுக்கள் மீது முடிவு செய்யாத அலுவலர்களை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர்களால் வாரந்தோறும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.இவ்வாறு குறைதீர்க்கும் நாளில் பெறப்படும் மனுக்கள் ஒவ்வொன்றும் மேற்கண்டவாறு தீர்வு காணப்படுகிறது.

இந்நிலையில் மேலே குறிப்பிட்டுள்ள திரு.இசக்கிமுத்து மற்றும் சுப்புலட்சுமி ஆகியோர்கள் கடந்த 4.9.17, 18.9.17, 25.9.17 மற்றும் 9.10.17 ஆகிய நாட்களில் மொத்தம் நான்கு மனுக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கட்கிழமை தோறும் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாளில் மனுக்கள் கொடுத்துள்ளார்கள். இம் மனுக்கள் உடனடியாக மேற்படி நாட்களில் கூட்டத்திற்கு காவல் கண்காணிப்பாளர் சார்பில் ஆஜராகியிருந்த அலுவலரிடம் நேரில் ஒப்படைக்கப்பட்டது. அவரும் காவல் கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்து காவல் கண்காணிப்பாளர் மேற்படி மனுக்களை உரிய விசாரணை செய்து முடிவு செய்திட ஆய்குடி காவல் ஆய்வாளர்க்கு அனுப்பியுள்ளார். அதன் பேரில் ஆய்வாளரும் விசாரணை செய்துள்ளார்.. விசாரணையில் கடந்த ஜூலை முதல் அக்டோபர் வரை திரு.இசக்கிமுத்து குடும்பம் காசிதர்மம் கிராமத்தில் குடியிருப்பு இல்லை என்றும். திருப்பூரில் வசித்து வருவதாகவும் கிராம நிர்வாக அலுவலர் சான்று அளித்துள்ளார்

எனவே திரு.இசக்கிமுத்து முத்துலட்சுமி ஆகியோர்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் அளித்த 4 மனுக்கள் உடன் காவல்துறைக்கு நடவடிக்கைக்கு அன்றே ஒப்படைக்கப்பட்டுள்ளது. காவல்துறையிலிருந்தும் மேற்படி மனுக்கள் மீது விசாரணை செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி நபர்கள் அளித்துள்ள 4 மனுக்கள் மீது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உடடியான நடவடிக்கைகள் அன்றே எடுக்கப்பட்டு காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து வந்த அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டு காவல்துறை கண்காணிப்பாளர்அலுவலகத்திலிருந்தும் உடன் சம்பந்தப்பட்ட ஆய்வாளர்க்குஅனுப்பப்பட்டு அவரும் விசாரணையை நடத்தியுள்ளர்கள்.

எனவே பத்திரிக்கைகளிலும் ஊடகங்களிலும் செய்திகளிலும் தெரிவிக்கப்படுவது போல் 6 மனுக்கள் மேற்படி நபர்களால் அளிக்கப்படவில்லை. திருமதி. சுப்புலட்சுமி என்பவர் மொத்தம் 4 மனுக்கள் அளித்துள்ளார். அதில் நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை என்பது சரியான செய்தி அல்ல. இதில் மாவட்ட நிர்வாகத்தில் எவ்வித அலட்சியமோ அல்லது காலதாமதமோ அல்லது மெத்தனமான நடவடிக்கைகளோ இல்லை. எனினும் இவர்கள் தீக்குளித்தது தொடர்பாகவும் இறப்பு தொடர்பாகவும் உண்மையான காரணங்களை கண்டறியவும் அதன் மீது உரிய நடவடிக்கைகள் எடுத்திடவும் தீவிர விசாரணை காவல்துறை மூலம் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது..

மேலும் இனி வரும் காலங்களில் அதீத வட்டி வசூல் செய்யப்படுவதாக வரப்பெறும் புகார்களை பெற பிரத்யேகமாக ஓர் தொடர்பு எண் (கைபேசி எண் 9629711194)உருவாக்கப்பட்டுள்ளது. அதில் பெறப்படும் மனுக்கள் புகார்கள் உடன் சம்பந்தப்பட்ட காவல்நிலையத்திற்கு காவல் கண்காணிப்பாளர் மூலம் அனுப்பப்பட்டும் இணையாக வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்க்கு அனுப்பப்பட்டு அவரும் விசாரணை செய்து இரு அலுவலர்களும் ஒரு வாரத்திற்குள் அறிக்கையை அளித்து அதன்படி அதீத வட்டி வசூல் தொடர்பாக வரப்பெறும் புகார்களுக்கு தீர்வு காண வழிவகை செய்யப்பட்டுள்ளது. என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.